In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.15 |
| Name: Keeran | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 09-06-2025.

**(A2 died. 1st Accused absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் வத்தலக்குண்டு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். அம்மயநாயக்கனூர் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றியபோது கு.எண்.319/2020 u/s 294(b) and 302 IPC வழக்கில் இறந்துபோன செண்பகராஜன் பிரேதத்தை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்வதற்காக 5.6.2020ம் தேதி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் மதுரை அரசு மருத்துவமனை சென்று பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை அவரது உறவினர்களிடம் நல்லடத்திற்காக ஒப்படைத்தேன். பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புக்களை பகுப்பாய்வுக்காக சேகரிக்கப்பட்டது. ஆய்வாளரிடம் நான் அறிக்கை செய்தேன். 21.08.2020ம் தேதி உடல்உள்ளுறுப்புக்காளை மதுரை ரசாயன பரிசோதனைக்கூடத்தில் பகுப்பாய்வுக்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-

5.6.2020ம் தேதி பிரேதப்பரிசோதனை செய்து 70 நாட்கள் கடந்து 21.8.2020ம் தேதியன்று பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால்

சரிதான். நான் சொல்வது போல் பிரேதபரிசோதனைக்கு நான் உடனிருக்கவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.06.09 17:51:16 +0530

Principal District Judge,
Dindigul.